# உங்களுக்கு உணவு நிவாரணம் தேவையா?

Canberra Relief Network என்பது COVID-19 நோய்ப்பரவல் காலத்தில் தேவைப்படும் நடைமுறை உதவி மற்றும் பரிந்துரைகளை வழங்குவதற்கென ACT முழுவதும் உள்ள சமூக அமைப்புக்களுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் ஒரு செயற்றிட்டமாகும்.

Canberra Relief Network, ACT பிராந்தியத்திலுள்ள தனிநபர்கள் மற்றும் குடும்பங்களுக்குத் தேவையான உணவு, தனிப்பட்ட மற்றும் வீட்டு சுகாதாரம் பேணுவதற்கான அத்தியாவசிய பொருட்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

தற்போதைய நெருக்கடிநிலையால் ஏற்பட்டுள்ள பொருளாதார தாக்கத்தால் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளவர்கள் உட்பட, நிதி நெருக்கடியை அனுபவிக்கும் எவருக்கும் இந்த உதவி கிடைக்கிறது.

Canberra Relief Network உதவியைப் பெற உங்கள் வீட்டு விபரத்தைப் பதிவு செய்ய, தயவுசெய்து 1800 43 11 33 ஐ அழைக்கவும். அல்லது www.canberrarelief.com.au என்ற இணையத்தளத்திற்குச் செல்லவும்.

இந்த செயற்றிட்டத்திற்கு ACT அரசு நிதியுதவி வழங்குகிறது.